23.06.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வளரிளம் பருவகால நோய்கள்: மருத்துவப் பயிலரங்கம்**

வளரிளம் பருவகால நோய்கள், தடுப்பு முறைகள் குறித்த மருத்துவப் பயிலரங்கம் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. அகில இந்திய மகப்பேறு, மகளிர் மருத்துவர் கூட்டமைப்பு, வளரிளம் பருவகால ஆரோக்கியக் கமிட்டி ஆகியவை இணைந்து இந்த பயிலரங்கத்தை நடத்தின. இளைஞர் நலன், சுகாதாரம், ஆரோக்கிய வாழ்வுக்கான வழிமுறைகள் குறித்து நடைபெற்ற இந்தப் பயிலரங்கத்துக்கு அகில இந்திய மகப்பேறு, மகளிர் நல மருத்துவர்கள் கூடடமைப்பின் வளரிளம் பருவகால ஆரோக்கியக் கமிட்டி தலைவர் மருத்துவர் ஜெயம் கண்ணன், தேசிய அமைப்பாளர் மருத்துவர் சம்பத்குமாரி ஆகியோர் தலைமை வகித்தனர்.

நிலைய மருத்துவ அலுவலர் கண்ணன் ஐசக் முன்னிலை வகித்தார். மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் ஹரிதாஸ் பயிலரங்கைத் தொடக்கி வைத்துப் பேசினார். பயிலரங்கத்தில் வளரிளம் பருவத்தினர் எதிர்கொள்ளும் நோய்கள் பற்றிய விளக்கங்களும், தடுப்பு முறைகள், நவீன சிகிச்சை முறைகள் குறித்தும், மாறிவரும் உணவுப் பழக்கங்கள், அதிகரித்து வரும் மின் பயன்பாட்டு சாதன உபயோகங்கள், குறைந்து வரும் உடற்பயிற்சிகள், மன அழுத்தம், பாலியல் தொந்தரவுகள் குறித்தும், அவற்றை எதிர்கொள்ள வேண்டிய முறைகள் பற்றியும் மருத்துவர்கள் ஆலோசனை வழங்கினர்.

டாக்டர்கள் விஜயபாஸ்கர், சித்தார்த், தீனதயாளன் உள்ளிட்ட மருத்துவத் துறைத் தலைவர்கள் கலைந்து கொண்டனர். செங்கல்பட்டு, காஞ்சிபுரம்,

மேல்மருவத்தூர், மதுராந்தகம், தாம்பரம் உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்திருந்த மருத்துவர்கள் பயலரங்கத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகளையும், கருத்துகளையும் எடுத்துரைத்தனர்.

முன்னதாக, செங்கல்பட்டு மருத்துவமனை அருகிலிருந்து மருத்துவக் கல்லூரி வரை நடைபெற்ற விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்ட செவிலியர்கள், கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி வந்தனர். பயிலரங்கத்தையொட்டி, செவிலியர் கல்லூரி மாணவிகள் மருத்துவ விழிப்புணர்வு பற்றிய குறு நாடகங்களை நடத்திக் காட்டினர். மேலும், இதுபோன்ற பயிலரங்குகள், செயல்விளக்கங்கள் வருங்காலங்களில் பல்வேறு கல்லூரிகளில் நடத்த இருப்பதாகவும் அமைப்பின் பொறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

**காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை**

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால், மண்டியா மாவட்டத்தில் உள்ள கே.ஆர்.எஸ். அணை விரைவில் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. குடகு மாவட்டத்தில் பாகமண்டலா, சோம்வார்பேட்டை, மாதபுரா, ஷிராளி உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், மண்டியா மாவட்டத்தில் உள்ள கே.ஆர்.எஸ். அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. திங்கள்கிழமை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 22,127 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து நொடிக்கு 500 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் முழுக் கொள்ளளவு 124.80 அடியாகும். திங்கள்கிழமை அணையின் நீர்மட்டம் 82.60 அடியாக உள்ளது.

குடகு மாவட்டம் உள்ளிட்ட காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடந்து பலத்த மழை பெய்து வருவதால், கே.ஆர்.எஸ். அணை விரைவில் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மண்டியா, மைசூரு

உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கபினி அணையில் திங்கள்கிழமை மாலை நிலவரப்படி நீர்மட்டம் 2269.80 அடியாக உயர்ந்துள்ளது. நீர்வரத்து நொடிக்கு 13,200 கன அடியாக உள்ளது. கேரள மாநிலம், வயநாடு உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால், அணையின் மொத்த கொள்ளளவான 2284 அடியை (கடல்மட்ட அளவு) இன்னும் ஒரு வாரத்தில் எட்டும் என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. நீர்வரத்து அதிகரித்துள்ள போதும், அணையிலிருந்து நொடிக்கு 500 கன அடி நீர் மட்டுமே வெளியேற்றப்படுகிறது.

**சிறுதானிய உணவுப் பொருள்களை மகளிர் குழு விற்பனை செய்ய ஏற்பாடு**

மகளிர் சுயஉதவிக் குழுவினர் தயாரிக்கும் சிறுதானிய உணவுப் பொருள்களை விற்பனை செய்ய மாநகராட்சி வசதி செய்து தரும் என ஆணையர் சி.கதிரவன் திங்கள்கிழமை தெரிவித்தார்.

மதுரை மாநகராட்சி நகர்புற வாழ்வாதாரத் திட்டம் மற்றும் மதுரை ரூட்செட் பயிற்சி நிலையமும் இணைந்து மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு சிறுதானிய உணவு மற்றும் மதிப்புக்கூட்டு பொருள்கள் தயாரித்தல் பயிற்சி அளித்தன. பத்து நாள்கள் நடைபெற்ற பயிற்சி முகாமின் நிறைவு நாள் நிகழ்ச்சி தெற்குவாசல் மாநகராட்சி பள்ளி வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ் வழங்கி மாநகராட்சி ஆணையர் சி.கதிரவன் பேசியது: நவீன காலத்தில் பொதுமக்கள் துரித உணவுகளையே விரும்புகின்றனர். தற்போதுள்ள சூழல்நிலையில் உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் அளித்து பொதுமக்கள் சிறுதானிய உணவுகளை தேடிச்செல்கின்றனர். சிறுதானியத்தின் மூலம் வழக்கமாக செய்யும் உணவுகளைத் தவிர்த்து புதிய வகை உணவுகளை தயாரிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக வரகு, திணை, சாமை மூலம் சேமியா உற்பத்தி செய்யலாம். அதற்கான தயாரிப்பு உபகரணங்கள் வாங்க மாநகராட்சி உதவும். சுயஉதவிக் குழுவினர் தயாரிக்கும் சிறுதானிய உணவு வகைகளை விற்பனை செய்ய வசதிகள் செய்து தரப்படும். அதில் முதல்கட்டமாக மாநகராட்சி பள்ளிகள் மற்றும் மாநகராட்சி எல்கைக்கு உள்பட்ட கல்லூரிகளில் விற்பனை செய்ய மாநகராட்சி மூலம் பரிந்துரைக்கப்படும், என்றார்.

மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முருகபிரபு, நபார்டு வங்கி உதவிப் பொதுமேலாளர் மகேஷ், ரூட்செட் பயிற்சி நிலைய இயக்குநர் ஆனந்தன், மாநகராட்சி நகர்புற வாழ்வாதாரத்திட்ட மேலாளர் பா.நீலவள்ளி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**கொடைக்கானலில் கேரட் விளைச்சல் அதிகரிப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி**

கொடைக்கானலில் கேரட் விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில் கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கொடைக்கானலில் அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, பள்ளங்கி, கோம்பை, மன்னவனூர், பூம்பாறை, கிளாவரை, குறிஞ்சிநகர் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 4 மாதங்களுக்கு முன் முதல் போகமாக கேரட் பயிரிடப்பட்டது. கடந்த சில மாதங்களாக கொடைக்கானல் பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால், தண்ணீர் தட்டுப்பாடின்றி கிடைத்தது. இதனால் கேரட் பயிர் விளைச்சல் நன்றாக இருந்தது. இதைத்தொடர்ந்து தற்போது கேரட் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. அனைத்து வயல்களிலும் கேரட் நன்கு விளைந்து, விளைச்சலும் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது:

நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் தற்போது கேரட் அறுவடை தொடங்கியுள்ளது. விளைச்சல் நன்றாக இருப்பதால் தரம் பிரிக்கப்பட்டு வெளி மார்க்கெட்டுகளுக்கு அனுப்பப்படுகிறது. பொதுவாக கேரட் நன்கு

விளைந்தாலும், கிலோ ரூ.12முதல் ரூ.15வரை மட்டுமே விலைபோகும். ஆனால் தற்போது கிலோ ரூ.25முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்படுவதால் கூடுதல் லாபம் கிடைக்கும் வாய்ப்புள்ளது என்றனர்.

**அமராவதி அணையில் நீர் மட்டம் 60 அடியை எட்டியது**

மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்து வரும் கனமழை காரணமாக அமராவதி அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை நிலவரப்படி 60 அடியை எட்டியுள்ளது. இந்நிலையில், ஜூன் 26-ஆம் தேதி பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என தமிழக அரசுக்கு பொதுப்பணித் துறையினர் கருத்துரு அனுப்பியுள்ளனர். உடுமலையை அருகே உள்ள அமராவதி அணை மூலமாக திருப்பூர், ஈரோடு, கரூர் வரை, இந்த மூன்று மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும் நூற்றுக்கணக் கான கிராமங்களின் குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டு இறுதியில் வடகிழக்குப் பருவ மழை நல்ல முறையில் பெய்ததால் அணை நிரம்பி வழியும் நிலையை எட்டிது. அப்போது அணையில் இருந்து உபரி நீரை வெளியேற்றும் நிலை ஏற்பட்டது. நிகழாண்டுத் தொடக்கத்தில் அதாவது ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளின் பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்காகவும் பல முறை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் சரியத் தொடங்கியது. மேலும் மார்ச் மாதத்தில் அணையின் நீர் மட்டம் மிகவும் குறைந்து காணப்பட்டது.

இதன் காரணமாக, கோடை காலத்தில் குடிநீர் பிரச்னையை சமாளிக்க முடியுமா என்ற நிலை ஏற்பட்டது. ஆனால், அணையின் நீர் பிடிப்புப் பகுதிகளில் கடந்த மாதம் கோடை மழை தொடர்ந்து பெய்ததால்

அணையின் நீர் மட்டம் படிப்படியாக உயர்ந்து 50 அடியை எட்டியது. இதனால், கோடை காலத்தில் நூற்றுக்கணக்கான கிராமங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன் கேரள மாநிலத்தில் தென்மேற்குப் பருவ மழை தொடங்கியதன் காரணமாக, அமராவதி அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளான சின்னாறு, தேனாறு, பாம்பாறு பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு தண்ணீர் வரத்து கடந்த சில நாள்களாக அதிகரித்தது. ஞாயிற்றுக்கிழமை இரவு 2,000 கன அடியை எட்டிய நிலையில், திங்கள்கிழமை மாலை அணையின் நீர்மட்டம் 60 அடியை எட்டியுள்ளது. இதுகுறித்து பொதுப்பணித் துறையினர் கூறியது:

தென்மேற்குப் பருவமழை காரணமாக அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது. இதனால், அணையின் நீர்மட்டம் 60 அடியை எட்டியுள்ளது. இந்நிலையில் பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்ற விவசாயிகள் கோரிக்கையை ஏற்று ஜூன் 26-ஆம் தேதி அணையிலிருந்து தண்ணீர் திறக்க கருத்துரு தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றனர். அணை நிலவரம்: 90 அடி கொள்ளளவு கொண்ட அமராவதி அணையில் திங்கள்கிழமை காலை 7 மணி நிலவரப்படி 59.38 அடியாக நீர் மட்டம் இருந்தது. அணைக்கு உள்வரத்தாக 2198 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. 4,032 மில்லியன் கன அடி கொண்ட அணையில் 1,688.05 மில்லியன் கன அடி நீர் இருப்பு இருந்தது. அணையில் இருந்து 14 கன அடி தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது. அணைப் பகுதியில் 20 மி.மீ. மழைப் பொழிவு பதிவாகியிருந்தது.

**அந்தியூர் விற்பனைக் கூடத்தில் பருத்தி ஏலம் தொடக்கம்**

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பருத்தி ஏலம் திங்கள்கிழமை தொடங்கியது. தற்போது பருத்தி அறுவடை தொடங்கிய

நிலையில் சத்தி, கோபி, எடப்பாடி, கொங்கணாபுரம், அம்மாபேட்டை, அந்தியூர் உள்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், தங்களது பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

மொத்த வரத்து 1300 மூட்டைகள். பிடி காட்டன் பருத்தி குவிண்டால் ரூ.3600 முதல் ரூ.4400 வரையில் ஏலம் போனது.

விற்பனைக் கூட கண்காணிப்பாளர் சுப்பராமன் முன்னிலையில் நடைபெற்ற ஏலத்தில் அந்தியூர், ஊத்தங்கரை, சேலம், அன்னூர், அவிநாசி, திருப்பூர், கொங்கணாபுரம் பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்றனர்.

விவசாயிகள் 32 ஆயிரம் தேங்காய்கள் கொண்டு வந்ததில், அவை ரூ 3.20 முதல் ரூ. 10 வரையில் விற்பனையானது. மக்காச்சோளம் 200 மூட்டைகள் வந்ததில் கிலோ ரூ.13.20 முதல் ரூ.13.50 வரையில் ஏலம் போனது.

÷எள் 800 மூட்டைகளில் சிவப்பு எள் கிலோ ரூ.32.40 முதல் ரூ.58.20 வரையிலும், வெள்ளை எள் கிலோ ரூ.70.30 முதல் ரூ.80.15 வரையிலும், கருப்பு எள் கிலோ ரூ.25.25 முதல் ரூ.45.25 வரையிலும் ஏலம் போனது. பச்சை நிலக்கடலை கிலோ ரூ.28.50 முதல் ரூ.33.50 வரையும், காய்ந்த நிலக்கடலை கிலோ ரூ.55.40 முதல் ரூ.60 வரையிலும் ஏலம் போனது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 70 அடியாக உயர்வு**

நீலகிரி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து திங்கள்கிழமை இரவு 8 மணி நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 70 அடியாக உயர்ந்தது.

÷ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய நீராதாரமாக உள்ளது பவானிசாகர் அணை. இதன் நீர்மட்ட கொள்ளளவு 120 அடி. மேட்டுப்பாளையம்

பவானிஆறும் தெங்குமரஹாடா மோயாறும் அணைக்கு முக்கிய நீர்வரத்தாகும். சில நாள்களாக நீலகிரி மலைப் பகுதியில் மழை பெய்து வருவதால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. 20-ஆம் தேதி அணையின் நீர்மட்டம் 66 அடியாக இருந்தது. அதைத் தொடர்ந்து, அணைக்கு நீர்வரத்து 345 கனஅடியில் இருந்து படிப்படியாக அதிகரித்து திங்கள்கிழமை இரவு 8 மணிக்கு 7,700 கனஅடியாக உயர்ந்துள்ளது.

இதனால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து 70 அடியை எட்டியுள்ளது. அணையில் இருந்து பவானிஆற்றுக்கு 200 கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது. கடந்த 3 நாள்களில் அணையின் நீர்மட்டம் 3.5 அடி நீர் உயர்ந்துள்ளது.

**ஜூன் 26-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியரகத்தில் ஜூன் 26-ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணிக்கு நடைபெறும் என ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தெரிவித்துள்ளார்.

முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று, தங்கள் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**தம்மம்பட்டியில் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ள பலாப் பழங்கள்**

சேலம் மாவட்டம், தம்மம்பட்டியில் கொல்லிமலை பலாப்பழங்கள் விற்பனைக்காகக் ஏராளமாகக் குவிக்கப்படுகின்றன.

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் உள்ள 300-க்கும் மேற்பட்ட குக்கிராமங்களில் நூற்றுக்கணக்கான பலா மரங்கள் உள்ளன. இதில் தற்போது விளைச்சல் தொடங்கியுள்ளது. இந்தப் பழங்கள் அறுவடை

செய்யப்பட்டு ஆட்டோ, வேன்கள் மூலம் தம்மம்பட்டிக்கு தினந்தோறும் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

குறிப்பாக திங்கள்கிழமை மாலை முதல் வியாழக்கிழமை மாலை வரை அதிக அளவில் பலாப்பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. பழங்களின் வரத்து அதிகமாக உள்ளதால் சிறிய ரகப் பழங்கள் ரூ.30 முதலும், பெரிய ரகப் பழங்கள் ரூ.110 வரையும் விற்பனை செய்யப்படுகின்றன.

இதுகுறித்து கொல்லிமலையைச் சேர்ந்த பொதுமக்கள் கூறியது:

நிகழாண்டில் பலாப்பழங்களின் விளைச்சல் அதிகளவு உள்ளது. இதனால் விலையும் குறைந்துள்ளது. பலாப்பழ விற்பனை இன்னும் இரு மாதங்கள் நீடிக்கும் என்றனர்.

**நாகை அருகே வேளாண் இடுபொருள் மையம் திறப்பு**

நாகப்பட்டினம் அருகேயுள்ள தெற்குபொய்கைநல்லூர் பரவை சந்தையில் தமிழக அரசு சார்பில் இயற்கை வேளாண் இடுபொருள் விற்பனை மையம் திங்கள்கிழமை தொடங்கப்பட்டது. இதில் உயிர் உரங்கள், மூலிகை பூச்சி விரட்டி, மண்புழு உரம், அமிர்த கரைசல் உள்ளிட்ட 27 வகையான இடுபொருள் விற்பனை செய்யப்பட உள்ளன. இதன்மூலம் நாகை பகுதியில் மண்ணின் வளம், நீர்வளம், பயிர்வளம் ஆகியவற்றை மேம்படுத்தவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், இடுபொருள் செலவை குறைக்கவும் இந்த மையம் திறக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் சரவணன், நபார்டு உதவி பொது மேலாளர் கணேஷ், கூடுதல் இயக்குநர் புஷ்பராஜ், ஊராட்சிமன்றத் தலைவர் திருவளர்ச்செல்வி அன்பழகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ஜூன் 26-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 26-ம் தேதி நடைபெறவுள்ளது. இதுகுறித்து நாகை மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஜூன் 26 }ம் தேதி ஆட்சியரக முதன்மை கூட்ட அரங்கில் காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று தங்கள் கருத்துகளை தெரிவித்து பயன்பெறலாம் என கூறப்பட்டுள்ளது.

**ஜூன் 25-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஜூன் 25 ஆம் தேதி நடைபெற உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் (பொ) ப. மதுசூதன் ரெட்டி.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளது:

காலை 11 மணியளவில் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில், வேளாண்மை சம்பந்தமாக நீர்ப்பாசனம், கடனுதவிகள், இடுபொருள்கள், எந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் மற்றும் முறையீடுகள் குறித்து விவாதிக்கப்படும்.

எனவே, இந்தக் கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

**பருத்தி பயிரில் சட்டிக் கலப்பை உழவு அவசியம்**

பருத்தி பயிரில் சட்டிக் கலப்பை மூலம் உழவு செய்வது அவசியம் என்றார் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆடிப் பட்டத்தில் மானாவரி பயிராக அதிக அளவில் பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது, மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் பெய்த கோடை மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் உழவு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். பருத்தி பயிருக்கு கரிசல் மண் பகுதிகளில் சட்டிக் கலப்பை அல்லது உளிக் கலப்பையை கொண்டு முதலில் கோடை உழவு செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்யும் போது, மண்ணானது ஒன்று முதல் ஒன்றரை அடி ஆழம் உழவு செய்யப்பட்டு, மண்ணின் கடின தன்மை குறைந்து பொலபொலவென மாறும். பிறகு கொக்கி கலப்பை கொண்டு குறுக்கு நெடுக்காக உழவு செய்து ஆடிப் பட்டத்தில் மழை பெய்தவுடன் தரமான பருத்தி விதைகளை தகுந்த இடைவெளியில் நடவுசெய்ய வேண்டும். இவ்வாறு உழவு செய்து பருத்தி விதைகளை நடவு செய்யும் போது, ஆழமான வேர் வளர்ச்சியுடைய பருத்தி செடிகளின் வேர்கள் நன்றாக வளர்ந்து செடிகள் செழுமையாக இருக்கும். அதோடு மட்டுமின்றி மண்ணின் நீர்பிடிப்பு திறன் அதிகரித்து, பருத்தி செடிகள் வறட்சியை தாங்கி வளரவும் துணை புரிகின்றன. மேலும், மண்ணில் உள்ள தீங்குயிரி பூச்சியினங்களின் முட்டைகள், இளம் பருவ நிலைகள் அனைத்தும் சூரிய ஒளியில் பட்டு செயலிழப்பதால் பூச்சி தாக்குதலும் குறைகிறது.

எனவே, எதிர்வரும் பருவத்தில் மானவாரியாக பருத்தி பயிரிடும் விவசாயிகள் முதலில் சட்டிக் கலப்பை கொண்டு கோடை உழவு செய்து பிறகு, கொக்கி கலப்பை மூலம் உழுது பிறகு பயரிட்டு அதிக மகசூல்

பெறலாம். மேலும், விவரங்களுக்கு 89390 03569, 99442 44582 ஆகிய எண்களை தொடர்புகொள்ளலாம்.

**விவசாயிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக ஆகாயத் தாமரை!**

விவசாயிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறி வரும் ஆகாயத் தாமரையைக் கட்டுப்படுத்த வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதேநேரத்தில் ஆகாயத் தாமரையை உரமாக்கும் பயிற்சிகளை அதிகரிக்க வேண்டுமென ஆராய்ச்சித் துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகி, பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் தாவரங்களில் கருவேல மரங்களுக்கு அடுத்ததாக ஆகாயத் தாமரை உள்ளது. பிரேசிலில் இருந்து இந்தியாவுக்கு கடந்த 19 ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக ஆகாயத் தாமரை அலங்காரச் செடியாக கொண்டு வரப்பட்டது. நீர்நிலைகளில் கழிவுநீர் கலப்பது அதிகரிப்பு, ரசாயன உரங்களின் பயன்பாடு காரணமாக இந்தியாவின் பெரும்பாலான நீர்நிலைகளை ஆகாயத் தாமரை ஆக்கிரமித்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தின் முக்கிய கால்வாய்களான நதியுன்னி கால்வாய், வடக்கு மற்றும் தெற்கு கோடைமேலழகியான் கால்வாய்கள், கோடகன் கால்வாய், பாளையங்கால்வாய், திருநெல்வேலி கால்வாய் உள்ளிட்டவற்றில் ஆகாயத் தாமரைகளின் ஆக்கிரமிப்பால் தண்ணீரின் போக்கில் தடை ஏற்பட்டு வருகிறது. இதனால் கடைமடைக்கு தண்ணீர் செல்வதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வறட்சிக்கு வித்திடுகிறது: இதுகுறித்து முதுநிலை தாவரவியல் மாணவர் ஒருவர் கூறியது: ஒரு குளத்தில் ஆகாயத் தாமரை இருந்தால், அது குளம் முழுக்க விரைவில் பரவி விடுகிறது. குளத்தின் மேல் மட்டப் பரப்பளவை விட இரண்டு, மூன்று மடங்கு அதிகப் பரப்பளவு உள்ள ஆகாயத் தாமரை குளத்தில் வளர்ந்து விடுகிறது. இதனால் குளத்தின் நீருக்குள் சூரிய ஒளி புக முடியாத சூழல்

உருவாகிறது. அடிக்கிற வெயில் எல்லாம் ஆகாயத் தாமரையில் விழ, அதில் ஏற்படும் வெப்பத்தைத் தணிக்க குளத்தில் உள்ள நீர் ஆவியாகிறது. ஆகாயத் தாமரை இலைகளில் உள்ள நுண் துளைகளின் வழியே இந்த ஆவி வெளியேறுகிறது. ஆகாயத் தாமரை இல்லாத குளத்தில் நேரடியாக வெயில் பட்டால் வற்றும் தண்ணீரை விட ஆகாயத் தாமரை உள்ள குளத்தில் அதிகம் தண்ணீர் ஆவியாகிறது. குளம் விரைவில் வற்றி, வறட்சிக்கு வித்திடுகிறது. இதுதவிர மீன் போன்ற நீர் வாழ் உயிரினங்களுக்குத் தேவையான ஆக்சிஜன் கிடைக்க விடாமல் தடுக்கிறது. பாசிகள் வளர்ச்சியையும் தடுத்து, நீர்வாழ் உயிரினங்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட காரணமாகிறது. கால்வாய்களில் குவியல் குவியலாய் சேரும் ஆகாயத் தாமரைகளை அப்புறப்படுத்த, ஒவ்வொரு போகத்துக்கும் சில ஆயிரங்களை செலவழிக்க வேண்டிய கட்டாய நிலை உள்ளது என்றார். உரமாக்க பயிற்சி தேவை: இதுகுறித்து சிற்றாறு பாதுகாப்பு இயக்கத்தின் தலைவரும், பேராசிரியருமான விஜயலட்சுமி கூறியதாவது: நீர்நிலைகளுக்கும், விவசாயிகளுக்கும் அச்சுறுத்தலாக ஆகாயத் தாமரை மாறி வருவது மறுக்க முடியாது. அதே நேரத்தில் இதனைக் கட்டுப்படுத்த, அமெரிக்காவில் உள்ள ஒரு பூச்சியினத்தின் உதவியை நாடுவது உள்ளிட்ட 3 வழிகள் உள்ளன. அதில் மனித முயற்சியால் அப்புறப்படுத்தி உரமாக்குவதே சிறந்தது என்பது எனது கருத்து.

அதாவது, ஒரு குளம் அல்லது கால்வாயில் இருந்து சேகரிக்கப்படும் ஆகாயத் தாமரையின் இலைகளை மட்டும் தனியாகப் பிரித்தெடுத்து அதனை கால்நடைகளுக்கு உணவாக அளிக்கலாம். பசு, எருமை மட்டுமன்றி வான்கோழிகளும் ஆகாயத் தாமரையின் இலையை உண்ணும் பழக்கம் கொண்டவை. ஆனால், அவற்றின் தண்டு பகுதியை சாப்பிட விரும்பாது.

ஆகாயத் தாமரையில் இருந்து இலைபுரதம் என்பதை உருவாக்க முடியும். இதுதவிர மிகவும் எளிமையாக ஆகாயத் தாமரையை உரமாக மாற்ற முடியும். பிலிப்பின்ஸ் உள்ளிட்ட நாடுகளில் ஆகாயத் தாமரை உர உற்பத்தி மிகவும் அதிகமாக உள்ளது. அதுகுறித்து பல ஆண்டுகளாக ஆய்வு செய்து தொழில்நுட்பத்தை தயாரித்து வைத்துள்ளேன். இதற்கு அரசின் ஒத்துழைப்பு கிடைத்தால் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவும் தயாராக உள்ளேன். ஆகாயத் தாமரையைக் கொண்டு சிப்பிக் காளான் வளர்ப்பும் ஆராய்ச்சி முறையில் வெற்றி பெற்றுள்ளது என்றார் அவர்.

ஆராய்ச்சிகளுக்கு உதவுங்கள்: இதுகுறித்து சித்த மருத்துவ மாணவரான ரமேஷ் கூறியது: ஆகாயத் தாமரை குறித்து பல்வேறு ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. கழுத்து கழலைக்கு ஆகாயத் தாமரை இலையை அரைத்து கஷாயம் செய்யலாம் எனவும், ரத்த சுத்திகரிப்பு மற்றும் உடல் மெலிந்து போகும் தன்மையை மாற்றவும் இவை உதவும் எனவும் ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. இருப்பினும் ரசாயனம் கலக்காமல் இந்த தாவரத்தின் மூலம் கிடைக்கும் இதர பயன்கள் குறித்து விரிவான ஆராய்ச்சி செய்தால் விவசாயிகளுக்கு உதவுவதோடு, மக்களுக்கும் நன்மை கிடைக்க வாய்ப்பு உண்டு. அதற்கு அரசு தேவையான ஊக்கம் வழங்க வேண்டும் என்றார்.

**"மராமத்துப் பணிகளில் காலதாமதம்'**

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் வேலுமயில் கூறியது: திருநெல்வேலி மாவட்டத்தில் கால்வாய்களில் மராமத்துப் பணிகளில் காலதாமதம் தொடர்ந்து வருகிறது. ஆகாயத் தாமரையைக் கட்டுப்படுத்த, தண்ணீர் திறக்கும் முன்பாக மராமத்து செய்ய வேண்டும். செலவுத்தொகையை குறைக்கும் வகையில், கால்வாய்களில் தண்ணீர் திறந்த பின்பு ஜெ.சி.பி. இயந்திரங்களைக் கொண்டு பெயரளவுக்கு மராமத்து செய்து ஆகாயத் தாமரையை வேறுபகுதிக்கு திருப்பி

விடுகிறார்கள். ஆகாயத் தாமரையால் தண்ணீர் தடைப்பட்டு கால்வாய் கரையில் உடைப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

பொதுப்பணித் துறையினர், விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் முறையிட்டும் தீர்வு கிடைப்பதில்லை. இதே நிலை தொடர்ந்தால் வலுவான போராட்டங்களை நடத்துவதைத் தவிர விவசாயிகளுக்கு வேறு வழியில்லை என்றார் அவர்.

**கொடுமுடியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 14 அடி உயர்வு**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் மழையால், கொடுமுடியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 14 அடி உயர்ந்தது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்பு பகுதியில் மிதமான மழை நீடித்து வருகிறது. திங்கள்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 28 மி.மீ, சேர்வலாறு அணையில் 21 மி.மீ, மணிமுத்தாறு அணையில் 5.2 மி.மீ, ராமநதி அணையில் 19 மி.மீ, கருப்பாநதி அணையில் 24 மி.மீ, குண்டாறு அணையில் 3 மி.மீ, அடவிநயினார் அணையில் 16 மி.மீ, கொடுமுடியாறு அணையில் 50 மி.மீ, கன்னடியன் அணைக்கட்டில் 3 மி.மீ, களக்காட்டில் 2.2 மி.மீ, தென்காசியில் 23.6 மி.மீ, ஆய்க்குடியில் 6.2 மி.மீ, ராதாபுரத்தில் 7 மி.மீ மழை பதிவாகியுள்ளது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 747.41 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 378 கனஅடியும், கடனாநதி அணைக்கு 83 கனஅடியும், ராமநதி அணைக்கு 32 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு 16 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு 18 கனஅடியும், கொடுமுடியாறு அணைக்கு 250 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

நீர்மட்டம் உயர்வு: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 70.15 அடியாக இருந்தது.

அணையிலிருந்து பாசனம், குடிநீர் தேவைக்கு 1,132 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 76.41 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 82.10 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணையிலிருந்து பெருங்கால் பாசனத்திற்கு 75 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 14 அடி உயர்ந்து 22 அடியாகவும், கடனாநதி அணை நீர்மட்டம் 0.50 அடி உயர்ந்து 54 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 1.50 அடி உயர்ந்து 45 அடியாகவும், கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 44.62 அடியாகவும், குண்டாறு அணையின் நீர்மட்டம் 15.74 அடியாகவும், அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 1.75 அடி உயர்ந்து 47 அடியாகவும், வடக்குப் பச்சையாறு அணையின் நீர்மட்டம் 27 அடியாகவும், நம்பியாறு அணையின் நீர்மட்டம் 12.63 அடியாகவும் இருந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கேழ்வரகு உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு முயற்சி**

நாடு முழுவதும், கேழ்வரகு உற்பத்தியை அதிகரிக்க, அதன் கொள்முதலுக்கான ஆதரவு விலையை மத்திய அரசு உயர்த்தி உள்ளது.சமீபத்தில், கம்பு உள்ளிட்ட பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. கம்புக்கு, 40 ரூபாய்

உயர்த்தப்பட்டுள்ளது; கேழ்வரகுக்கு அதிகபட்சமாக, 100 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த, 2014 - -15ல், 100 கிலோ கேழ்வரகின் ஆதரவு விலை, 1,550 ரூபாய்; இந்த ஆண்டு, 1,650 ரூபாய்.

இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, உ.பி., பீகார், ஒடிசா, குஜராத், மகாராஷ்டிரா, இமாச்சல பிரதேச மாநிலங்களில் கேழ்வரகு உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், தமிழகம், கர்நாடகாவில் தான் உற்பத்தி அதிகம். கேழ்வரகில் கால்சியம் சத்து உள்ளது. உடல் எடையை கட்டுக்குள் வைப்பது, வெப்பத்தை குறைப்பது, எலும்புக்கு பலம் அளிப்பது உள்ளிட்ட பல நன்மைகளை கேழ்வரகு தருகிறது.சத்துள்ள உணவான கேழ்வரகு உற்பத்தியை அதிகரிக்கவே, அதற்கான, ஆதரவு விலையை மத்திய அரசு உயர்த்தி அறிவித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.-- நமது நிருபர் --

## பெரியாறில் 152 அடி தேக்க பேபி அணையை பலப்படுத்த நடவடிக்கை:மூவர் குழுவினர் ஆய்வு




கூடலூர்:முல்லைப் பெரியாறு அணையில் 152 அடி நீர் தேக்குவதற்கான

நடவடிக்கையில், பேபி அணையைப் பலப்படுத்துவது தொடர்பாக, மத்திய நீர்ப்பாசன தலைமை பொறியாளர் நாதன் தலைமையிலான மூவர் குழு நேற்று அணைப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டது. முல்லைப்பெரியாறு அணையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மத்திய நீர்ப்பாசன முதன்மை பொறியாளர் எல்.ஏ.வி.நாதன் தலைமையிலான மூன்று அதிகாரிகள் அடங்கிய கண்காணிப்புக்குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவில், தமிழக அரசு சார்பில் பொதுப்பணித்துறை செயலாளராக இருந்த சாய்குமார் இடம் பெற்றிருந்தார். இவர் மின்வாரிய தலைவராக மாறுதலாகி சென்றபின், தற்போது பொதுப்பணித்துறை செயலராக உள்ள பழனியப்பன் இக்குழுவில் தமிழக அரசு சார்பில் உள்ளார். கேரள அரசு சார்பில் நீர்ப்பாசனத்துறை தலைமை செயலர் குரியன் உறுப்பினராக உள்ளார்.

இந்த மூவர் குழு கடந்த ஆண்டு ஜூலை 17 ல் பெரியாறு அணையை முழுமையாக ஆய்வு செய்து, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி அணையில் 142 அடியாக உயர்த்த 13 மதகுகளையும் இறக்கி நடவடிக்கை எடுத்தது. அதன்பின், ஆகஸ்ட் 19, செப்டம்பர் 14, நவம்பர் 3, 24 ஆகிய தேதிகளில் இக்குழு அணைப்பகுதியை ஆய்வு செய்தது. தற்போது ஆறாவது முறையாக இக்குழு 7 மாதங்களுக்குப்பின் நேற்று அணைப்பகுதியை ஆய்வு செய்ய சென்றது.

கடந்த ஆண்டு நவம்பர் 21 ல் அணையின் நீர்மட்டம் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை உறுதிபடுத்தும் வகையில் 142 அடிநீர் தேக்கப்பட்டது. அதன்பின் பெரியாறு அணையை ஒட்டியுள்ள பேபி அணையை பலப்படுத்திபின் 152 அடியாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என அப்போது மூவர் குழுவின் தலைவர் நாதன் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் நேற்று பேபி அணையைப் பலப்படுத்தும் நடவடிக்கைக்காக, ஆய்வு நடத்த மூவர் குழுவினருடன் அணைப்பாதுகாப்பு இயக்குனர் மீனாட்சிசுந்தரம், அணை தொழில்பிரிவு

கண்காணிப்பு பொறியாளர் ராஜேந்திரன், செயற்பொறியாளர் குணசேகரன் உடன் சென்றனர்.

பேபி அணையைப் பலப்படுத்த தமிழக அரசு 12 கோடி ரூபாய்க்கு திட்டமதிப்பீடு கொடுத்துள்ளதைத் தொடர்ந்து, இக்குழு பேபி அணையில் ஆய்வு மேற்கொண்டது. பலப்படுத்துவதற்கு மூன்று விதமான வடிவங்கள் முன்வைக்கப்பட்டது.

இதனை தேர்வு செய்து இக்குழு மத்திய நீர்ப்பாசனத்துறைக்கு பரிந்துரைக்கு அனுப்பும். மேலும் பேபி அணை பலப்படுத்தும் போது 54 மரங்களை வெட்ட வேண்டியுள்ளது. இந்த மரங்களை வெட்டுவதற்கான அனுமதியையும் மத்திய வன அமைச்சகத்திடம் அனுமதி கோரியுள்ளது.

இந்த அனுமதி கிடைத்தவுடன் பேபி அணை பலப்படுத்தும் பணி துவங்கும்.

---கொட்டும் மழையில் ஆய்வு

* தேக்கடியில் இருந்து மூவர் குழுவினர் படகில் சென்றபின், தமிழக பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்ல தமிழக பொதுப்பணித்துறை படகு நிறுத்தப்பட்டிருந்தது. அதில் கூடுதலான பத்திரிகையாளர்கள் இருப்பதாகக்கூறி பெரியாறு அணைக்கு அழைத்துச் செல்ல மறுத்துவிட்டனர். ஒரு மணி நேரம் வாக்குவாதத்திற்குப்பின் படகில் அழைத்துச் சென்றனர்.

* பெரியாறு அணையில் குழுவினர் ஆய்வு செய்ய சென்றபோது பத்திரிகையாளர்கள் அப்பகுதிக்கு உடன்வர அனுமதி மறுக்கப்பட்டது.

*பெரியாறு அணையில் அதிகாரிகள் உட்காருவதற்காக தமிழக பொதுப்பணித்துறையினரால் கொண்டு செல்லப்பட்ட பிளாஷ்டிக் சேர்களை தேக்கடியில் வனத்துறை தடுத்து அனுமதி மறுத்தனர்.

* பெரியாறு அணையில் கொட்டும் மழையில் மூவர் குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். மழை பெய்ததால் பேபி அணையில் 10 நிமிடங்கள் மட்டுமே ஆய்வு செய்துவிட்டு திரும்பினர்.

## சென்னையில் மழைக்கு வாய்ப்பு

சென்னை:'அடுத்த, 24 மணி நேரத்திற்கு, தமிழகம் மற்றும் புதுச்சேரியில், ஓரிரு இடங்களில் மழை பெய்யலாம். சென்னையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## சிறுவாணி அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு

கோவை:பருவமழை தீவிரமடைந்துள்ளதால், சிறுவாணி அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.கோவை மாநகரத்தில், 38 வார்டுகளில் வசிக்கும், எட்டு லட்சம் மக்களுக்கும், வழியோர கிராமங்களில் வசிக்கும் இரண்டுலட்சம் மக்களுக்கும், சிறுவாணி திட்டம் மூலம் குடிநீர் வினியோகம்செய்யப்படுகிறது.சிறுவாணி அணை கடந்தாண்டு, ஆகஸ்ட் மாதம் நிரம்பியது. அதன்பிறகு மழை தொடர்ந்ததால், மூன்று மாதத்திற்கு மேலாக அணை நிரம்பி வழிந்தவாறு இருந்தது. குடிநீர் தேவைக்கு தினமும், 103 மில்லியன் லிட்டர் வீதம் தண்ணீர் எடுக்கப்பட்டதால், அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்தது.சிறுவாணி அணையில் நீர்புகு கிணற்றிலுள்ள நான்கு வால்வுகளில், மூன்று வால்வுகளுக்கு கீழ் நீர்மட்டம் சென்றதால், தண்ணீர் எடுக்கும் அளவு குறைக்கப்பட்டது. தினமும் குடிநீர்

வினியோகம் செய்யும் முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு, நான்கு நாட்களுக்கு ஒருமுறை வினியோகம் செய்யப்படுகிறது.இந்நிலையில், மூன்று நாட்களாக, கனமழை பெய்வதால், சிறுவாணி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. சிறுவாணி அணையின், 15.1 மீட்டர் உயரத்தில், 19ம் தேதி, 1.7 மீட்டர் நீர்மட்டம் இருந்தது.மழை தீவிரமடைந்து, அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், நேற்றைய நிலவரப்படி, நீர்மட்டம், 2.78 மீட்டராக இருந்தது. கடந்த நான்கு நாட்களில், 1.08 மீட்டர் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

## மழையால் வரத்து குறைவு

சின்னசேலம் : சின்னசேலம் பகுதியில் மழை பெய்ததால் மார்க்கெட் கமிட்டிகளு மக்கா சோளம் வரத்து குறைந்தது.சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று மக்கா சோளம் வரத்து குறைந்தது. எள்ளும் வந்தது. மக்கா சோளம் 10 மூட்டைகள் வந்தன. அதிக விலை ரூ 1309க்கு விலை போனது, குறைந்த விலை ரூ.1284. எள் 2 மூட்டைகள் வந்தன. அதிக விலை ரூ.4381, குறைந்த விலை ரூ.3935 ஆகும்.கடந்த வாரம் 520 மக்கா சோளம் மூட்டைகள் வந்தன. கொள்முதல் ரூ 6 லட்சத்து 96 ஆயிரம். எள் 50 மூட்டைகள் வந்தன. கொள்முதல் ரூ ஒரு லட்சத்து 84 ஆயிரம்.

## பார்த்தீனியம் செடியை உரமாக்குவது எப்படி? வேளாண் அதிகாரி விளக்கம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், விவசாய நிலங்களில், பார்த்தீனியம் செடிகள் அதிகளவு வளர்ந்துள்ளது. இதனால், அந்த செடிகளை எப்படி உரமாக மாற்றுவது என்பது பற்றி, வேளாண் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்பு, தக்காளி, மஞ்சள், மரவள்ளி கிழங்கு, பருத்தி மற்றும் கேழ்வரகு, சாலை உள்ளிட்ட பயிர்கள் மற்றும் தென்னை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும், காய்கறிகள் மற்றும் மலர் வகைகளும் குறிப்பிட்டு அளவு, சாகுபடி நடக்கிறது. குறிப்பிட்ட காலத்தில் பருவமழை பெய்யாதது மற்றும் விளை பொருள்களுக்கு உரிய விலை இல்லாதது, தொழிலாளர் பற்றக்குறை, கூலி உயர்வு உள்ளிட்ட, பல்வேறு காரணங்களால், கடந்த, சில ஆண்டுகளாக, விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், விவசாய நிலங்களில், பார்த்தீனியம் செடி வேகமாக பரவி வருகிறது. இதனால், விவசாய சாகுபடி குறைந்து வருவதுடன், கால்நடைகளும், விவசாயிகளும், பாதிக்கப்பட்டு வரும் அவல நிலை உள்ளது. இந்த செடிகளை அழிக்க, வேளாண் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள், கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து, வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: உழவியல் முறைப்படி, இளம் பார்த்தீனியம் செடிகளை, கையால் வேரோடு பறித்து, எரித்து விடலாம். பார்த்தீனியம் செடிகளை பூப்பதற்கு முன், மக்கவைப்பத்தின் மூலம், விதைகளின் முளைப்பு திறனை அழிக்கலாம். இந்த முறையில், பார்த்தீனியம் செடிகளை கத்தி மூலமாக, சிறு சிறு துண்டுகளாக வெட்டி, தரையில், 10 செ.மீ., உயரத்துக்கு அடுக்க வேண்டும்.

அதன் மேல், டிரைக்கொடெர்மா விரிடி, பூஞ்சான காரணியை பரப்பி அதன் மேல் அரை சதம் யூரியா கரைசலை தெளிக்க வேண்டும். இவ்வாறு, ஒரு மீட்டர் உயரத்துக்கு அடுக்கி, மண்ணை கொண்டு பூசி மூடவேண்டும். இரு வாரங்களுக்கு பின், ஒரு முறை நன்றாக கிளறி விடவேண்டும். இதன் மூலம், 40 நாட்களில், இது, சத்துமிக்க உரமாகி

விடுகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் மக்கிய உரத்தை, எல்லா பயிர்களுக்கும் இடலாம். இந்த முறையில் பார்த்தீனியம் கட்டப்படுத்தவதோடு, அவற்றை உரமாக மாற்றுவதன் மூலம் இரட்டிப்பு பயன் அடையமுடியும். மேலும், பயிரிடப்படாத இடங்களாக விவசாய நிலங்களில், பார்த்தீனியத்தை கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் தண்ணீருக்கு, 200 கிராம் வீதம் சமையல் உப்பை நன்கு கரைத்து, அத்துடன், இரண்டு மில்லி லிட்டர், ஒட்டு திரவம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். ஒரு லிட்டர் தண்ணீருக்கு, எட்டு கிராம் சோடியம் உப்பை நன்கு கரைத்து அத்துடன், இரண்டு மில்லி லிட்டர், ஒட்டு திரவம் கலந்து தெளித்தும் கட்டுப்படுத்தலாம். முளைத்த பின், களைக்கொல்லியான மெட்ரிபூஜின், மூன்று கிராமை, ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து பயிரில்லாத நிலையில் தெளிக்க வேண்டும்.

மேலும், விளை நிலங்களில் பயிருக்கு தகுந்தவாறு, ரசாயன களைக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தியும், பார்த்தீனியம் செடிகளை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## ரூ.69.90 லட்சம் மதிப்பில் வேளாண் பொருட்கள் ஏலம்

அந்தியூர்: அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்துக்கு, நேற்று, ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டம், கர்நாடக மாநிலத்தில் இருந்தும் விவசாயிகள் விற்பனைக்காக பருத்தி, தேங்காய், எள் ஆகிய விளை பொருட்களை கொண்டு வந்திருந்தனர்.

இவற்றை வாங்கி செல்ல கோவை, அன்னூர், பொள்ளாச்சி, கொங்கனாபுரம், ஊத்தங்கரை பகுதி வியாபாரிகள் வந்திருந்தனர். பருத்தி விவசாயிகள், முதன் முதலாக நேற்று, 1,300 மூட்டை பருத்தி "பிடி' ரகத்தை விற்பனைக்காக கொண்டு வந்தனர். குறைந்த பட்சம், ஒரு

கிலோ, 36 முதல், 44 ரூபாய் வரை ஏலம் கூறப்பட்டு, 20 லட்சம் ரூபா=ய்க்கு விற்பனையானது. மேலும், 32,000 தேங்காய், 3.20 முதல், 10 ரூபாய் வரை, 2.7 லட்சம் ரூபாய்க்கும், கொப்பரை தேங்காய், 60 மூட்டைகள், குறைந் த பட்ச விலையாக, 57.29 முதல், 81.29 ரூபாய் வரை, 2.50 லட்சம் ரூபாய்க்கும் ஏலம் போனது.

மேலும், 1,800 மூட்டைகள் எள் கொண்டு வந்ததில், வெள் ளை ரக எள் கிலோ ஒன்று, 76.19 முதல், 80.16 ரூபாயக்கும், சிவப்பு எள், 32.39 முதல், 58.19 ரூபாய் வரைக்கும், கருப்பு ரகம், 25.16 முதல், 45.15 ரூபாய் வரையிலான விலையில், 40 லட்சம் ரூபாய்க்கும், மக்காச்சேளாம், 200 மூட்ø ட, 13.19 முதல், 13.49 ரூபாய் வ ரை, 2.6 லட்சத்துக்கும், ஆமணக் கு, 5 மூட்டைகள் கிலோ ஒன்று, 32.70 என, 10 ஆயிரம் ரூபாய்க்கும், நிலக்கடலை, 95 மூட்டை பச்சை கிலோ, 28.50 முதல், 35 ரூபாய் வரையும், காய்ந்தது, 56.35 முதல், 66 ரூபாய் வரை, 2 லட்சம் ரூபாய்க்கும் விற்பனையானது. நேற்று ஒரே நாளில், மொத்தம், 69 லட்சத்து, 90 ஆயிரம் ரூபாய்க்கு வேளாண் பொருட்கள் வர்த்தகம் நடந்தது, என, விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

**புதிய தொழில் நுட்பம்விவசாயிகளுக்கு பயிற்சி**

கோபி: கோபி அருகே வேளாண் துறை மூலம், பண்ணை இயந்திர மயமாக்கல் புதிய தொழில் நுட்பம் குறித்து, விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. கோபி வேளாண் துறையின் சார்பில், பாரியூர், நஞ்சகவுண்டன் பாளையத்தில், பண்ணை இயந்திர மயமாக்கல் குறித்த செயல் விளக்கம் பாரியூர் பஞ்., தலைவர் பழனிசாமி தலைமையில் நடந்தது. தென் மண்டல பண்ணை இயந்திரம் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம், ஆந்திரா மாநிலத்தை சேர்ந்த தொழில் நுட்ப வல்லுனர் மவ்லா தலைமையிலான குழுவினர், நவீன தொழில்

நுட்பத்துடன் நிலக்கடலை உடைத்தல், தீவன புல் வெட்டுதல், புதிய ரோட்டா வேட்டா இயந்திரம் செயல்பாடுகள் குறித்து, விவசாயிகளுக்கு நேரில் செயல்விளக்கம் அளித்தனார். கோபி பகுதியல் இயந்திரம் மூலம் நெற்பயிரில் களை எடுத்தல், சேதாரமின்றி நெல் அறுவடை செய்தல் குறித்து புதிய தொழில் நுட்ப யுக்திகளை, விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர். கோபி வேளாண் உதவி இயக்குனர் வாசுதேவன், வேளாண் கூட்டுறவு சங்கத்தலைவர் சண்முகம், அட்மா திட்ட தலைவர் பொன்னுசாமி, வேளாண்மை அலுவலர்கள் முரளி, கிருஷ்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**குந்தா அணையில் உபரி நீர் வெளியேற்றம்**

மஞ்சூர்:முழு கொள்ளளவை எட்டியதை அடுத்து, நீலகிரி மாவட்டம் குந்தா அணையில் இருந்து, வினாடிக்கு 150 கன அடி, உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.நீலகிரி மாவட்ட மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. மின் உற்பத்திக்கு பயன்படும் அணைகளில் ஒன்றான குந்தா அணை, நேற்று முன்தினம் இரவு நிரம்பியது. மொத்த கொள்ளளவான, 89 அடியை நீர் மட்டம் எட்டியதை தொடர்ந்து, அணையின் பாதுகாப்பு கருதி, உபரி நீர், இரு மதகுகளில் வெளியேற்றப்பட்டது. இரவு முழுவதும், வினாடிக்கு, 300 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. நேற்று காலை முதல் மழை சற்று ஓய்ந்ததால், அணைக்கு தண்ணீர் வரத்து குறைந்தது. இதையடுத்து, ஒரு மதகில் மட்டும் வினாடிக்கு, 150 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

**சாலையோரங்களில் அச்சுறுத்தும் மரங்கள்பூக்கும் மரங்களை வளர்க்க யோசனை**

ஊட்டி :'நீலகிரி மாவட்ட சாலையோரங்களில் பூக்கும் மரங்களை வளர்ப்பது, இயற்கை சீற்றத்தின் போது ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும்' என, யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரியில், மூன்று நாட்களாக பலத்த காற்றுடன், மழை பெய்து வருகிறது. சாலையோரங்களில் உள்ள கற்பூரம், சீகை உட்பட மரங்கள், வேரோடு பெயர்ந்து சாலையில் விழுகின்றன. சாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் மீது விழுந்து, சேதம் விளைவிக்கின்றன. இரு நாட்களுக்கு முன், அரசு பஸ் மீது மரம் விழுந்ததில், ஒருவர் பலியானார்.இதனால், சீகை, கற்பூரம் உட்பட மரங்களை அகற்றி, பூக்கும் மற்றும் பழ மரங்களை நடவு செய்ய வேண்டும், என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார சேவை அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் சிவதாஸ் கூறியதாவது:ஆங்கிலேயர் காலத்தில், சாலையோரங்களில், மிக உயரமாக வளரும் கற்பூரம், சீகை உள்ளிட்ட மரங்கள் வளர்க்கப்பட்டன. அவை தற்போது ராட்சத மரங்களாக வளர்ந்து நிற்கின்றன. மரங்களின் மீது வாகனங்கள் மோதுவது; அதனால், ஏற்படும் உயிரிழப்புகள், மழை, காற்று சமயங்களில், சாலையில் விழும் மரங்களால், உயிர், உடமை சேதம்; மரங்களை அகற்ற காலதாமதம் ஏற்படுவது போன்ற பல பிரச்னைகள் உள்ளன. சிங்கப்பூர், மலேஷியா போன்ற நாடுகளில், சாலையோரங்களில், விரைவில் வள ரக் கூடிய பூக்கும் மற்றும் பழம் தரும் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இந்த மரங்கள் சாலையில் விழாது; விழுந்தாலும், அப்புறப்படுத்துவது எளிது.எனவே, நீலகிரி மாவட்ட சாலையோரங்களில் ஜெகரண்டா, சரக்கொன்றை, நெல்லிக்காய், ஆவாரம் பூ, மூங்கில் உட்பட பூக்கும் மற்றும் பழ மரங்களை நடவு செய்ய வேண்டும்.

இதன் மூலம் இயற்கை சீற்றத்தின் போது பாதிப்புகள் தவிர்க்கப்படும். சாலைகளின் தன்மை அறிந்து, அந்தந்த இடங்களுக்கு ஏற்ப, மரங்களை தேர்வு செய்து நடுவது உகந்ததாக இருக்கும். இவ்வாறு, சிவதாஸ் கூறினார்.

## பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை

பழநி:பழநி பகுதியில் பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என சி.ஐ.டி.யூ., தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. பழநியில் சி.ஐ.டி.யூ., அனைத்து தொழிற்சங்கம் இணைப்புக்குழு பேரவைக்கூட்டம் நடந்தது. மாவட்டக்குழு உறுப்பினர் ஈஸ்வரன் தலைமை வகித்தார். கன்வீனர் பிச்சைமுத்து, மாவட்ட செயலாளர் கணேசன் முன்னிலைவகித்தனர். பழநிபகுதியில் விளைவிக்கப்படும் மாம்பழத்திற்கு விலை இல்லாமல் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். ஆகையால் பழம் பதப்படுத்தும் தொழிற்சாலையும், பழநிகோயிலில் பக்தர்கள் காணிக்கைøயாக தரும் முடியை வைத்து ""டோபா" தொழிற்சாலையும் நிறுவவேண்டும். புதுதாராபுரம்ரோட்டில் ரயில்வே மேம்பாலம் கட்டவேண்டும், வையாபுரி குளத்தில் கழிவுநீர் கலப்பதை தடுக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட துணை தலைவர் மோகனா, மார்க்சிஸ்ட் பழநி நகர செயலாளர் குருசாமி, முன்னாள் நகர்மன்ற தலைவர் ராஜமாணிக்கம் உட்பட பலர் பங்கேற்றனர்.

## சர்க்கரை நோயை விரட்டும்"சுகர் பீரி' சீனித்துளசி

காந்திகிராமம்: "சுகர் பீரி' சீனித் துளசி மூலிகையை சாகுபடி செய்து சர்க்கரை நோயை விரட்டலாம் என, காந்திகிராம பல்கலை

தெரிவித்துள்ளது. மேற்குதொடர்ச்சி மலையில் "ஸ்டீபியா ரொபோடியானா' என்ற சீனித்துளசி மூலிகை உள்ளது. இவற்றின் இலையை மென்று தின்றால் இனிப்பாக இருக்கும். கலோரி அற்றது. இவை வெல்லம், சக்கரையை (சீனி) விட பல மடங்கு இனிப்பு சுவை கொண்டது. இவற்றின் மூலம் தயாரிக்கப்படும் உணவுப்பொருட்களை உண்டால் ரத்தத்தில் சர்க்கரை அதிகரிக்காது. இதனால் சர்க்கரை நோய் வராது. மலைப்பிரதேசத்தில் மட்டும் காணப்படும் அவற்றை, சமதள பகுதியில் பயிடுவதற்காக காந்திகிராம பல்கலை உயிரியியல் உதவி பேராசிரியர் ஆர்.ராமசுப்பு ஆய்வு மேற்கொண்டார். முடிவில் சீனித்துளசி சமதள பகுதியிலும் நன்றாக வளர்வது தெரியவந்தது.ராமசுப்பு கூறியதாவது: சீனித்துளசியில் உள்ள சர்க்கரை உடலுக்கு எந்த தீங்கும் தராது. அவற்றை பொடி செய்து இனிப்பு தேவையுள்ள உணவு பொருட்களில் பயன்படுத்தலாம். இதன் மூலம் "சாக்கரின்' பயன்பாட்டை குறைக்க முடியும். மலைப்பிரதேசத்தை போல், மற்ற பகுதிகளிலும் சீனித்துளசி நன்றாக வளர்கிறது. இதனால் அவற்றை மூலிகை பயிராக விவசாயிகள் சாகுபடி செய்யலாம், என்றார். தொடர்புக்கு 90948 15828.

**காளான் வளர்ப்பு பயிற்சி**

திருவாடானை:திருவாடானை அருகே காடாங்குடி கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு காளான்விதை உற்பத்தி, காளான் கூடாரம் அமைத்தல் குறித்து பண்ணை பயிற்சி அளிக்கபட்டது. வேளாண் உதவி இயக்குனர் நாகராஜ், கடலோர உவர் ஆராய்ச்சி மைய பேராசிரியர் ராம்குமார், தொழில்நுட்ப மேலாளர் சூர்யா பங்கேற்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**கோவை, நீலகிரி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களில் 4 நாட்கள் கனமழை பெய்யும் வானிலை மைய அதிகாரி தகவல்**




சென்னை,

தமிழ்நாட்டில் நீலகிரி, கோவை, தேனி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் 4 நாட்களுக்கு கனமழை பெய்யும் என்று வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். தென்மேற்கு பருவமழை தீவிரம்

தென் மேற்கு பருவமழை கர்நாடகா, தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் தீவிரம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் நீலகிரி, கோவை, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் குறைந்து உள்ளது. வானிலை குறித்து சென்னை வானிலை

மைய அதிகாரிகள் கூறியதாவது:-
வெப்ப சலனம் காரணமாக தமிழ்நாட்டில் மேற்கு தொடர்ச்சிமலையை யொட்டியுள்ள மாவட்டங்களில் மழை பெய்துவருகிறது. இன்று(செவ்வாய்க்கிழமை) நீலகிரி, தேனி மாவட்டங்களில் பலத்த மற்றும் மிக பலத்த மழை பெய்யும். கன்னியாகுமரி, திண்டுக்கல், கோவை மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்யும்.

4 நாட்கள் பலத்த மழை இந்த மாவட்டங்களில் 26-ந்தேதி வரை 4 நாட்கள் மழை நீடிக்கும். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் லேசான மழை பெய்யும. இவ்வாறு வானிலை அதிகாரிகள் தெரிவித்தனர்.
நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-
பெரியாறு 14 செ.மீ., வால்பாறை 10 செ.மீ., ஊட்டி 9 செ.மீ., கேத்தி 7 செ.மீ., கூடலூர் பஜார் தலா 5 செ.மீ., நடுவட்டம் 4 செ.மீ., பேச்சிப்பாறை, குந்தாபாலம், பாபநாசம் ,மைலாடி தலா 3 செ.மீ., தென்காசி, நாகர்கோவில், பொள்ளாச்சி, போடி நாயக்கனூர் தலா 2 செ.மீ., உத்தமபாளையம், உடுமலைப்பேட்டை, கோவை, குன்னூர், கொடைக் கானல், பூதப்பாண்டி தலா 1 செ.மீ. மழை பெய்துள்ளது.

**இயற்கை வேளாண்மைக்கு செல்வோமே...!**




வேளாண்மை முக்கிய பங்கு வகித்துக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டில், சில மாவட்டங்களில் காய்கறி சாகுபடிதான் பெரும்பங்கு வகிக்கிறது. இந்த காய்கறிகளை அண்டை மாநிலமான கேரளாவுக்கு அனுப்பியும், அதேபோல வளைகுடா நாடுகளுக்கு அனுப்பியும் விவசாயிகள் வருவாய் ஈட்டிவந்தனர். இந்த நிலையில், தமிழ்நாட்டில் இருந்து அனுப்பப்படும் காய்கறிகளில் ரசாயன பூச்சிமருந்து அதிகமாக இருக்கிறது என்று கேரள அரசாங்கம் சிவப்பு கொடி காட்டிவிட்டது. சோதனைமேல் சோதனை என்பதுபோல, இதே காரணத்தைக்காட்டி வளைகுடா நாடுகளும் காய்கறிகள், பால்பொருட்கள் போன்ற அழுகும் பொருட்களுக்கு தடைவிதித்துவிட்டது. துபாய் போன்ற பல நாடுகளில் உள்ள விமான நிலையங்களில் இங்கிருந்து அனுப்பப்பட்ட பொருட்கள் தேங்கிக்கிடக்கின்றன. இந்த அதிர்ச்சியோடு இன்னொரு அதிர்ச்சியும் சேர்ந்துவிட்டது.

தமிழக அரசு வேளாண்மைத்துறை தந்த கணக்குப்படியே 2001–2002–ல் 62.26 லட்சம் ஹெக்டேராக இருந்த மொத்த சாகுபடி பரப்பு, 2011–2012–ல் 58.90 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் இன்னும் குறைந்திருக்கும். இந்த நிலங்களில் பயிரிடும் திறனும் குறைந்துவிட்டது. இதற்கு முக்கிய காரணம் மண்வளம் பெரிதும் குறைந்துவிட்டதுதான். அளவுக்கு அதிகமாக ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தியதாலும், ஒரே பயிரை சாகுபடி செய்துகொண்டே வந்ததாலும், மாட்டுச்சாணம், மக்கிய இலை, தழைகள் போன்ற இயற்கை உரங்களை பயன்படுத்தாததாலும், நிலமகள் மலட்டு தன்மையை அடைந்து கொண்டுவரும் பரிதாபகரமான சூழ்நிலை தொடங்கிவிட்டது.

தமிழக அரசின் வேளாண்மை கொள்கை விளக்க குறிப்பிலேயே மண் ஊட்ட சத்து குறைந்துவிட்டது பட்டவர்த்தனமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 1980–ம் ஆண்டில் 1.26 சதவீதமாக இருந்த மண்ணின் அங்ககச்சத்து 2010–2011–ல் 0.45 சதவீதமாக குறைந்துவிட்டதாக அரசு அறிக்கையே தெரிவிப்பதால், இன்றைய காலக்கட்டத்தில் எவ்வளவு குறைந்து இருக்கும் என்று நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. இந்தியாவில் ஆண்டுக்கு 2 கோடி டன் ரசாயன உரம் இறக்குமதி செய்யப்படுகிறது. ஒரு லட்சம் டன் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறோம். உர இறக்குமதியில் இந்தியாவிலேயே தமிழகம் 3–வது இடத்தில் இருக்கிறது. இந்த நிலையை மாற்றவேண்டும் என்றால், முன்னோர்கள் கற்றுத்தந்த இயற்கை இடுபொருள் வேளாண்மைதான் சிறந்தவழி என்றவகையில் 2–ம் பசுமை புரட்சியை குறிக்கோளாக கொண்டுள்ள தமிழக அரசு, தொழில் வளர்ச்சிக்கு சிறப்பு பொருளாதார மண்டலம்போல, விவசாய வளர்ச்சிக்கு சிறப்பு வேளாண்மை மண்டலங்களை அமைக்கும் வகையிலான இயற்கை இடுபொருள் வேளாண்மை கொள்கையை விரைவில் வெளியிட இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இதன்மூலம்

இயற்கை வேளாண்மைக்கென தனி இயக்குநரகம் அமைக்கப்படும். மேலும், அமைக்கப்படப்போகும் சீர்மிகு இயற்கை வேளாண்மை மையம், ரசாயன உரம், ரசாயன பூச்சி மருந்து எல்லாவற்றையும் விட்டுவிட்டு, பாரம்பரிய விதைகளை விதைத்து, இயற்கை உரம், இயற்கை பூச்சி மருந்து என்று பயன்படுத்த விவசாயிகளுக்கு கற்றுக்கொடுத்து, உதவிகளையும் செய்யவேண்டும். தமிழக அரசு அறிவிக்கப்போகும் இந்த இயற்கை வேளாண்மை கொள்கையை விவசாயிகள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். ஒருபக்கம் அன்னிய செலவாணி, மற்றொரு பக்கம் நிலத்தை சத்து இல்லாததாக்கி விவசாயிகளுக்கு செலவையும் அதிகரித்து வருமானம் இல்லாத நிலைக்கு ரசாயன உரமும், பூச்சி மருந்தும் தள்ளிவிட்டுக்கொண்டு இருக்கும் இன்றைய நிலைக்கு டாட்டா சொல்லிவிடலாம். இயற்கை விவசாயத்தில் நிலமகளும் வளம் பெறுவாள், நஞ்சிலா உணவையும் வாரி வாரி தருவாள்.

**போத்தாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் ரூ.12½ லட்சம் மதிப்பில் தானிய கிடங்கு திறப்பு**



காவேரிப்பட்டணம் ஒன்றியம் போத்தாபுரம் தொடக்க வேளாண்மை

கூட்டுறவு வங்கியில் ரூ.12½ லட்சம் மதிப்பில் 100 மெட்ரிக் டன் அளவு கொண்ட தானிய கிடங்கு கட்டப்பட்டுள்ளது. அதை தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். இதையொட்டி போத்தாபுரத்தில் நடந்த நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் குப்புசாமி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்க தலைவர் பெரியசாமி, துணைத் தலைவர் கிருஷ்ணன், துணை பதிவாளர் ரத்தினவேல், சார் பதிவாளர் ரவிச்சந்திரன், கூட்டுறவு இயக்குனர் முத்து மற்றும் உதவி செயலாளர் ஜெயந்தி, தவமணி, ஜெயபால், சின்னவன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கூட்டுறவு வங்கி செயலாளர் ராஜதுரை நன்றி கூறினார்.

**நெல்லை மார்க்கெட்டுகளில் வெங்காயம் விலை கடும் உயர்வு வரத்து குறைவால் விலை உயர்வு என வியாபாரிகள் தகவல்**



நெல்லை

வெங்காயம் விளைச்சல் மற்றும் வரத்து குறைவால் நெல்லையில் நேற்று ஒரு கிலோ ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டது.

விலை உயர்வு

சமையலில் தவிர்க்க முடியாத இடத்தை பிடித்திருக்கும் பொடி உள்ளி எனப்படும் வெங்காயத்தை தற்போது உரிக்காமலே கண்ணீரை வரவழைக்கிறது. அதன் விலை கடுமையாக உயர்ந்திருப்பதே இதற்கு காரணம்.

கடந்த மாதம் வரை வெங்காயம் ஒரு கிலோ ரூ.30–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக வெங்காயம் விலை உயர்ந்து நேற்று உச்சத்தை தொட்டது. அதாவது தரமான வெங்காயம் ஒரு கிலோ ரூ.70–க்கு விற்பனை ஆனது.

இதுகுறித்து டவுன் நயினார்குளம் மார்க்கெட் வியாபாரிகள் கூறியதாவது:–

விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்யும் நெல்லை டவுன் நயினார்குளம் மார்க்கெட் கமிஷன் கடைகளில் நேற்று தரமான நல்ல வெங்காயம் ரூ.45 முதல் ரூ.50 வரை ஏலம் கேட்கப்பட்டது. 2–வது ரக வெங்காயம் ரூ.40 வரை ஏலம் கேட்கப்பட்டது.

அதனை மொத்த வியாபாரிகள் எடுத்துச் சென்று சில்லறை வியாபாரிகளுக்கு ரூ.54 முதல் ரூ.60 வரை விற்றார்கள். சில்லறை வியாபாரிகள் பொதுமக்களுக்கு ஒரு கிலோ வெங்காயம் ரூ.65 முதல் ரூ.70 வரை விற்பனை செய்தார்கள்.

வரத்து குறைவு

ஆண்டுதோறும் ஆனி, ஆடி மாதங்களில் பல்லாரி மற்றும் பொடி வெங்காயம் வரத்து அதிகமாக இருக்கும். ஆனால் கடந்த அக்னி நட்சத்திர கோடை காலத்தில் பெய்த தொடர் மழையால் பாவூர்சத்திரம், கீழப்பாவூர், ஆலங்குளம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பாதிப்பு ஏற்பட்டது.

நடவு செய்யப்பட்டிருந்த பல்லாரி நாற்று மற்றும் வெங்காயம் ஆகியவை அழுகி போய் விட்டன. இதனால் வெங்காயம், பல்லாரி விளைச்சல் பாதிக்கப்பட்டது.

இதையொட்டி வெங்காயம் விலை சில்லறைக்கு ரூ.70 வரை விற்பனை செய்யப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் மற்றும் கர்நாடகா மாநிலம் மைசூரு பகுதியில் இருந்து ஓரளவுக்கு வெங்காயம் வரத்து இருப்பதால் இந்தளவுக்கு விலை கட்டுக்குள் நிற்கிறது. ஒரு வாரத்துக்கு பிறகு வெங்காயம் விலை குறைய வாய்ப்பு உள்ளது.

ஆனால் பல்லாரி விளைச்சல் குறைவாக இருந்த போதிலும் வெளி மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படுவதால் விலை கட்டுப்பாட்டில் உள்ளது. இவ்வாறு வியாபாரிகள் கூறினார்கள்.

தினகரன்

**விவசாயிகள் நிலை?**

விவசாயத்திற்கான வட்டி விகிதத்தை உயர்த்தவும், விவசாய கடன் வட்டி மானியத்தை நேரடி மானியத் திட்டமாக அமல்படுத்தவும் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு, விளிம்பு நிலையில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தையே கேள்விக்குறியாக்கிவிடும் என்றுதான் சொல்ல வேண்டும். உற்பத்தி செலவை கணக்கிட்டு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற எம்எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரையை நிறைவேற்றப்போவதாக தனது தேர்தல் வாக்குறுதியாக பிரதமர் மோடி தந்தார். ஆனால், உச்ச நீதிமன்றத்தில் அதுபோன்று விலை நிர்ணயம் செய்ய முடியாது. உற்பத்தி, தேவை மற்றும் உபரி உற்பத்திக்கு ஏற்றவாறுதான் விலை நிர்ணயம் செய்ய முடியும் என மத்திய அரசு தெரிவித்துவிட்டது. இந்நிலையில்தான் தேசிய மயமாக்கப்பட்ட

வங்கிகளில் வழங்கப்பட்டு வந்த விவசாய கடன்களுக்கான வட்டி விகிதம் 4 சதவிகிதத்திலிருந்து 11.75 சதவிகிதமாக வரும் ஜூலை மாதத்திற்கு பிறகு உயர்த்தப்போவதாக மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதுபோல் எதிர்காலத்தில் வட்டி மானியம், அல்லது விவசாய இடுபொருட்களுக்கு அரசு வழங்கும் மானியத்தையும் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்துவதற்கும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. மத்திய அரசின் இதுபோன்ற முடிவு, மாதக் கணக்கில் உழைத்து களைத்து விடுகின்ற விவசாயிகளை மேலும் அலைக்கழிப்புக்கு உள்ளாக்குவதுடன் எதிர்காலத்தை பற்றிய கவலையையும் ஏற்படுத்தி விடும் என்பதில் சந்தேகம் இல்லை.

மேலும் உர உற்பத்தி நிறுவனங்களின் கையிலேயே விலை நிர்ணய அதிகாரத்தை ஒப்படைத்துவிட்ட நிலையில் தனது பொறுப்பை தட்டிக்கழித்து நேரடி மானியம் வழங்குவதாக தப்பித்துக்கொள்ள நினைப்பதன் மூலம் பெருமுதலாளிகளின் நண்பனாக மத்திய அரசு செயல்படுவதைக் காட்டுகிறது என்கின்றனர் விவசாயிகள். இந்த நிலையில்தான் தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு ஒரு கடிதத்தை எழுதி மேற்கண்ட இரண்டு திட்டங்களிலும் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். இது வரவேற்கத்தக்கதுதான் என்றாலும், தமிழக அரசு விவசாயிகளை கையாளும் விதமும் கவலை தருவதாகத்தான் உள்ளது. தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெறும் கடனுக்கு மத்திய அரசையே மிஞ்சும் அளவிற்கு 13 சதவிகிதம் வட்டி நிர்ணயம் செய்துள்ளனர். நகைக் கடனுக்கான வட்டி விகிதத்தை 17.75 சதவிகிதம் நிர்ணயித்து விவசாயிகள் அடகு வைத்த நகைகளை எல்லாம் ஏலம் விடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். இதுபற்றி முதல்வர் எதுவும் கருத்து தெரிவிக்காமல் மவுனம் காத்து வருகிறார்.

கடந்த 2012-13ம் ஆண்டு வறட்சி பாதித்தபோது சென்னை தவிர்த்து மற்ற மாவட்டங்கள் அனைத்தையும் வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவித்து அரசிதழில் வெளியிட்டதோடு பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் நிவாரணம் அறிவிக்கப்பட்டது. இந்தியாவிலேயே ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரத்தை முதல் முறையாக அறிவித்திருப்பதாக பெருமையாகப் பேசிக் கொண்டனர். ஆனால் அறிவித்தபடி எந்த விவசாயிகளுக்கும் 15 ஆயிரம் இன்று வரை வழங்கப்படவில்லை. போராட்டங்கள் தொடர்வதை காண முடிகிறது. அதுபோல அந்தாண்டு கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட வட்டியில்லா கடனை தள்ளுபடி செய்யாமல் ஒத்திவைப்பதாக அறிவித்து மத்திய கால கடனாக மாற்றினர். அந்த கடனுக்கு சென்ற ஆண்டு முதல் கடன் பெற்ற தேதியிலிருந்து 13 சதம் வட்டி மற்றும் அபராத வட்டி சேர்க்கப்பட்டு மூன்று தவணைகளாக பிரித்து சென்ற ஆண்டு ஒரு தவணை கட்டியவர்களுக்கு மட்டும் புதிய கடன் கொடுத்தனர்.

கட்டாதவர்களை கடன் பெற தகுதியற்றவர்கள் எனக்கூறி தகுதியிழப்பு செய்துவிட்டனர். இதன் மூலம் பல விவசாயிகள் கந்து வட்டி கொடுமைக்கு ஆளாகி பல்வேறு இன்னல்களில் சிக்கித் தவிக்கின்றனர். இந்த துயரத்தில் இருந்து விவசாயிகளை காக்க மாநில அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பு ஒருபுறம் இருக்கிறது. மறுபுறம் விவசாய கடன் வட்டி மானியத்தில் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு ஏற்குமா என்ற எதிர்பார்ப்பு உள்ளது. மொத்தத்தில் விவசாயிகளின் நிலைமை கேள்விக்குறியாக உள்ளது. இதற்கு மத்திய, மாநில அரசுகள்தான் பதில் அளிக்க வேண்டும்.

**கர்நாடக டெல்டா மாவட்டங்களில் கன மழை அணைகள் நிரம்புகின்றன**




பெங்களூரு: கர்நாடக மாநிலம் காவிரி டெல்டா பகுதியில் கடந்த ஒருவாரமாக நல்ல மழை பெய்து வருகிறது. அதன் காரணமாக கே.ஆர்.எஸ்., கபினி, ஹாரங்கி, ஹேமாவதி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. கே.ஆர்.எஸ். அணைக்கு நேற்று மாலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 13 ஆயிரத்து 995 கன அடி தண்ணீர் வந்தது. அணையின் நீர்மட்டமும் 81.75 அடியாக உயர்ந்தது. தற்போது பெய்து வரும் மழை நீடித்தால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, அணை வேகமாக நிரம்பும் வாய்ப்புள்ளதாக தெரியவருகிறது. மொத்தம் 2,284 அடி உயரமுள்ள கபினி அணையில் நேற்று மாலை நிலவரப்படி 2,270.50 அடி தண்ணீர் இருந்தது. அணைக்கு வினாடிக்கு 18 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. பாசனத்திற்காக 500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

குடகு மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது. தொடர் மழை காரணமாக மொத்தம் 2,859 அடி உயரமுள்ள ஹாரங்கி அணையில் 2,820 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 654 கன அடி தண்ணீர் வந்தது. ஹாசன் மாவட்டத்தில் உள்ள ஹேமாவதி அணைக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. மொத்தம் 2922 அடி உயரம் கொண்ட அணையில்

நேற்று மாலை நிலவரபடி 2,873 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 922 கன அடி தண்ணீர் வந்தது. இந்த வார இறுதிக்கு காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள நான்கு அணைகளும் முழுமையாக நிரம்பிவிடும் என்று கே.ஆர்.எஸ். நீர்பாசன துறைமுதன்மை பொறியாளர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

**5 மாவட்டங்களில் கனமழை பெய்யும் வாய்ப்பு**




சென்னை: தென் மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதை அடுத்து 5 மாவட்டங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் தொடர்ந்து நிலவிய வெப்ப சலனம் காரணமாக வங்கக் கடலில் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவாகி காற்றழுத்தமாக மாறியது. இதனால் தமிழகத்தில் நல்ல மழை பெய்யும் என்று எதிர்பார்த்த நிலையில் அந்த காற்றழுத்தம் ஒடிசா மாநிலத்தில் கரை கடந்தது. மேலும், தென் மேற்கு பருவமழையின் காரணமாக கேரளாவை ஒட்டிய தமிழகப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. அதில் குன்னூர். நீலகிரி, கோவை, கன்னியாகுமரி உள்ளிட்ட பகுதிகளில் சூறைக்காற்றுடன் மழை பெய்து வருகிறது. இதனால் பல இ டங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. போக்குவரத்து தடை ஏற்பட்டது. இதைத் தெ ாடர்ந்து மேலும் மழை பெய்தபடி உள்ளது.

அதிகபட்சமாக நேற்று தேனி மாவட்டத்தில் 140 மிமீ மழை பெய்துள்ளது. கோவையில் 10 மிமீ, உதகமண்டலம் 90 மிமீ, வால்பாறை 80 மிமீ, தேவாலா 70 மிமீ, நீலகிரி 50 மிமீ, நடுவட்டம் 40 மிமீ, பேச்சிப்பாறை, பாபநாசம், மயிலாடி 30 மிமீ, தென்காசி, நாகர்கோயில் , பொள்ளாச்சி, போடி ந ாயக்கனூர் 20 மிமீ மழை பெய்துள்ளது. இதையடுத்து, தெற்கு கர்நாடகாவில் தற்போது தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதாலும், கேரளாவில் மழை பெய்து வருவதாலும் தமிழகத்தில் நீலகிரி, தேனி, கன்னியாகுமரி, திண்டுக்கல், கோவை ஆ கிய மாவட்டங்களில் கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது. வட மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது. சென்னையில் மாலை இரவு நேரங்களில் இடியுடன் மழை பெய்யும்.

**விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம்**

உடுமலை,: உடுமலை அருகே உள்ள மடத்துகுளம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் சார்பில் விவசாயிகளுக்கு வேடப்பட்டி கிராமத்தில் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது ஊராட்சி மன்ற தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர் திருமகள் ஜோதி உழவர் உற்பத்தியாளர் கம்பெனி அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கான அங்கீகாரம் கிடைத்தல் அவர்களின் உற்பத்தி பொருட்களுக்கு பெயர் சூட்டல்,இடு பொருட்களை குறைந்த செலவில் கொள்முதல் செய்து குழு உறுப்பினர்களுக்கு வினியோகித்தல் ஆகியவற்றை எடுத்து கூறினார். மேலும், விற்பனைக்குழு அமைப்பதன் அவசியம் குறித்தும் இக்குழு மூலம் விவசாயிகளுக்கு கிடைக்க கூடிய நலன்களை பற்றி கூறினார்.மேலும், தேங்காய், மக்காச்சோளம், கொண்டக்கடலை பயிர்களை காயவைத்து பதப்படுத்தி தரம் பிரித்து

அறுவடை முதல் விற்பனை வரையிலும் நவீன முறைப்படி சேமித்து மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி விற்பனை செய்வதால் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும் என தெரிவித்தார்.

தொடர்ந்து மடத்துகுளம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் விற்பனைக் கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சண்முகசுந்தரம் பொருளீட்டு கடன் பற்றியும் விவசாயிகள் விளைபொருட்கள் விலை வீழ்ச்சி காலங்களில் ஏற்படும் இழப்பை தடுப்பதற்கும் அவசர தேவைகளுக்கு 5 சதவீத வட்டியில் அதிகபட்சம் 180 நாட்கள் வரை விற்பனை கூட கிட்டங்கியில் இருப்பு வைத்து பொருளீட்டு கடன் வசதிகள் பெறுவது, உலர்களம் கிட்டங்கி வசதிகள் பற்றியும் எடுத்து கூறினார். மேலும், விவசாயிகளுக்கு உழவர் நலநிதி திட்டத்தை பற்றியும் கூறினார்.முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் செந்தில் திலீப் குமார் நன்றி கூறினார். ரேஷன் கடைகளுக்கு முழு ஒதுக்கீடு

**சேத்துாரில் விநோதம் விதைத்தது கம்பம் புல் விளைந்தது கோரைப்புல்**

ராஜபாளையம், : விளைநிலங்களில் கம்பம்புல் சாகுபடி செய்த சேத்தூர் விவசாயிகள் அறுவடையின்போது கோரைப்புல் வளர்ந்திருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளனர். காலாவதியான விதைகளை கொடுத்து கடை உரிமையாளர்கள் தங்களை ஏமாற்றியிருப்பதாக புலம்பி வருகின்றனர்.

ராஜபாளையம் அருகே சேத்தூர் பகுதியை சேர்ந்தவர் விவசாயி குருவையா. இவர் தனக்கு சொந்தமான 1 ஏக்கர் நிலத்தில் மூன்று கிலோ கம்பம்புல் விதை வாங்கி சாகுபடி செய்தார். இதற்காக 5 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருந்தார். அவ்வப்போது முறைவைத்து தண்ணீர் பாய்ச்சி வந்தார். விதைத்த ஒரு வாரத்தில் கம்பம்புல் செடிக்கு பதில், கோரைப்புல் வளர்ந்திருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்தார். விதை வாங்கிய கடையில் கேட்டபோது அவர்கள் பதில் அளிக்காமல் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இதையடுத்து கடந்த வாரம் விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முறையிட்டார். தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் அம்மையப்பன் உட்பட பல்வேறு விவசாயிகள் இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடப்பதாக கலெக்டரிடம் புகார் கூறினர்.

இதனால் அதிருப்தியடைந்த மாவட்ட கலெக்டர் ராஜாராமன், விதை மற்றும் உரங்களில் குறை உள்ளதா என ஆய்வு நடத்துமாறு வேளாண்மைதுறை அதிகாரிகளிடம் தெரிவித்தார். அதேப்போன்று இந்த விதைகளை விற்பனை செய்த உரக்கடையிலும் சோதனை நடத்துமாறு உத்தரவிட்டார். இருப்பினும் அதிகாரிகள் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இது குறித்து விவசாயி குருவையா கூறுகையில், ''ராஜபாளையத்தில் உள்ள தனியார் உரக்கடையில் 880 ரூபாய் கொடுத்து மூன்று கிலோ கம்பல்புல் விதை வாங்கி சாகுபடி செய்தேன். ஆனால், கம்பம்புல்லுக்கு பதில் கோரைபுல் வளர்ந்துள்ளது. நல்ல மகசூல் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலிருந்த எனக்கு இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் எனக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை, சம்பந்தப்பட்ட கடை உரிமையாளரிடமிருந்து பெற்றுதர மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்,'' என்றார்.

**விவசாயிகள் அதிகளவில் சிறு தானியம் பயிரிட வேண்டும் கலெக்டர் வேண்டுகோள்**

திருவள்ளூர், : திருவள்ளூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கத்தில், மாவட்ட திட்டக்குழு ஆய்வுகூட்டம், கலெக்டர் வீரராகவராவ் முன்னிலையில், மாவட்ட ஊராட்சி தலைவர் ரவிசந்திரன் தலைமையில், கடந்த 18ம் தேதி நடைபெற்றது. கூட்டத்தில், கல்வித்துறை, அனைவருக்கும் கல்வி இயக்கம், வேளாண்மை, சுகாதார, போக்குவரத்து,

வேளாண்மை பொறியியல், தோட்டக்கலை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை, கால்நடை பராமரிப்பு, நெடுஞ்சாலை, மின்வாரியம், மாநில சமச்சீர் வளர்ச்சித் திட்டம் ஆகிய துறைகளில், இந்த ஆண்டு செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் மேலும் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட துறைகளிடம் கலெக்டர் ஆய்வு செய்தார். கூட்டத்தில், ஆரோக்கியமான வாழ்விற்கு உறுதுணையாக உள்ள சிறு தானியங்களை விவசாயிகள் அதிகளவில் பயிரிட வேண்டும், என கலெக்டர் வேண்டுகோள் விடுத்தார்.

**குன்னூர் ஏல மையத்தில் டீத்தூள் விலை உயர்வு**

குன்னூர், : குன்னூர் ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 25வது தேயிலை ஏலம் கடந்த வியாழன், வெள்ளியில் நடந்தது. மொத்தம் 18.74 லட்சம் கிலோ டீத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம் 13.80 லட்சம் கிலோ. டஸ்ட் ரகம் 4.94 லட்சம் கிலோ.இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிக ஆர்வத்துடன் பங்கேற்றதால் 85 சதவீத டீத்தூள் விற்பனையானதுடன், அனைத்து ரகத்துக்கும் கிலோ ரூ.2 வரை கூடுதல் விலை கிடைத்தது. இலை ரகம் சாதா கிலோ ரூ.40 முதல் 44 வரையும், உயர் ரகம் ரூ.100 முதல் 140 வரையும், டஸ்ட் ரகம் சாதா ரூ.50 முதல் 55 வரையும், உயர் ரகம் ரூ.110 முதல் 165 வரையும் விற்றது. சிடிசி ரகத்துக்கு அதிகபட்சமாக கிலோ ஒன்றுக்கு ரூ.306ம், ஆர்த்தோடக்ஸ் ரகத்துக்கு ரூ.246ம் கிடைத்தது.அடுத்த ஏல விற்பனைக்கு 18.83 லட்சம் கிலோ டீத்தூள் தயாராக உள்ளது.

**இன்றைய நவீன வாழ்க்கை முறைக்கு அறிவியல் தொழில்நுட்பம் மிக அவசியம்**

ஈரோடு, : இன்றைய நவீன வாழ்க்கை முறைக்கு அறிவியல் தொழில்நுட்பம் மிகவும் தேவைப்படுகிறது என வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் வலியுறுத்தி உள்ளார். ஈரோடு நஞ்சனாபுரத்தில உள்ள

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 18வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இந்த விழாவிற்கு கல்லூரி தாளாளர் சச்சிதானந்தன் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:இன்றைய இளைஞர்கள் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளை தேடி செல்லும் நிலை உருவாகியுள்ளது. சமகால வாழ்க்கையின் மகிழ்ச்சியையும், சோகத்தையும் பதிவு செய்ய சமூக ஊடகங்களை இளைஞர்கள் பயன்படுத்தி வருகின்றனர். வெளிநாட்டு கல்வி, உயர் அறிவியல்நுட்பம் ஆகியவற்றை கற்றுக் கொள்வதில் தவறில்லை. இன்றைய நவீன வாழ்க்கை முறையில் அறிவியல் தொழில்நுட்பம் மிகவும் தேவை.

இந்திய கிராமங்களில் உழவர்கள் காய்கறி, மீன், கறி கிடைக்காத காலக்கட்டத்தில் பயன்படுத்துவதற்காக உபரியாக விளையும் வேளாண் பொருட்களை காய வைத்து பயன்படுத்தினார்கள். இதை அடிப்படையாக கொண்டு தான் பால்வளத்துறையில் பால்பவுடர் தயாரிக்கும் திட்டமே உருவானது. அந்த தொழில்நுட்பம் காரணமாக தான் இந்தியாவில் வெண்மை புரட்சி ஏற்பட்டது. பழங்கால இந்தியாவில் இல்லாத கலைகளே இல்லை. பழங்குடி மக்களின் வீடுகள், கேரளா தரவாடுகளின் வீடுகள், ஊராளி பழங்குடி மக்களின் வீடுகள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு ஐரோப்பிய கட்டிட கலைக்கு மாற்றாக பாரம்பரிய கட்டிட கலையை இந்தியாவை ஆண்ட கிழக்கிந்திய கம்பெனியினர் உருவாக்கினர். எளிய மக்களுக்கான கட்டிட கலை அறிவியல்நுட்பத்தை இந்தியாவில் இருந்து தான் வெளிநாட்டினர் கற்றுக் கொண்டனர். காவிரி பாயும் பகுதியில் நீரியல் கட்டுமானத்தை கட்டிய கரிகாலன் சோழனின் கல்லணையும், தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலும் நமது தமிழர்களின் கடந்த கால பாரம்பரிய அறிவியல் நினைவு

சின்னங்களாக இப்போதும் விளங்கி வருகிறது. இன்றைய இளைஞர்கள் பாரம்பரிய கலைகளையும், நவீன அறிவியல் தொழில்நுட்பங்களையும் இணைத்து புதிய படைப்புகளை உருவாக்க வேண்டும். இவ்வாறு கு.ராமசாமி பேசினார். விழாவில் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் 7 தங்கப்பதக்கங்கள் பெற்ற மாணவ, மாணவிகள் உட்பட 51 பேர் பாராட்டப்பட்டனர். இவ்விழாவில் கொங்கு வேளாளர் தொழில்நுட்ப கல்வி அறக்கட்டளை செயலாளர் பி.சி.பழனிச்சாமி, கொங்கு பொறியியல் கல்லூரி தாளாளர் வி.கே.முத்துசாமி, கல்லூரி முதல்வர் ராமன் மற்றும் மாணவ, மாணவியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.